வார்த்தையை வாபஸ் பெறுகிறேன். அதனை நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த மாதிரி பொருள்படும்படி அவர் கூறியிருந்தால், அதை நீக்குவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சை ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ** என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன வார்த்தையும், ** என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தையும், இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், உட்காருங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரை முற்றுகையிட்டனர்.)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-2-2017) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

14. 2015-2016 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*